# உறவின் பாதை. FR. Lawrence Antony.

<u>**முன்னுரை:**</u>

**‘உறவின் வேதனையில், ஏமாற்றத்தில், வேகுவதை விட, என் கட்டை விறகில் வேகலாம்’** என்று கூறலாம் இன்றைய உறவின் நிலைகளைப் பார்த்து. கண்களைத் திறந்து பாருங்கள், நம்மைச் சுற்றிலும் எத்தனை உறவுகள்?

அப்பா - அம்மா, கணவன் - மனைவி, மகன் - மகள். சகேரதரன் - சகோதரி, தாத்தா - பாட்டி. பேரன் - பேத்தி, நண்பர்கள், நெருங்கிய சொந்தங்கள். தூரத்து பந்தங்கள், தெரிந்தவர்கள், ஒருமுறை பார்த்தவர்கள் என்று மாபெரும் ஓர் உறவுப் பின்னலுக்குள் தான் நம் வாழ்க்கை அடங்கியிருக்கிறது.

இந்த உறவுகள் - எந்த அளவுக்கு ஆறுதலும், சந்தோஷம் தரக்கூடியதோ அந்த அளவிற்குத் துக்கமும், கவலைகளும், வெறுமையும் தரக்கூடியது.

எந்த அளவிற்கு ஆறுதல் தரக்கூடியதோ அந்த அளவிற்கு வேதனையும் தரக்கூடியது.

உறவுகள் எந்த அளவிற்குத் தாங்கிப் பிடிக்கக்கூடியதோ அந்த அளவிற்குத் தூக்கி எறியவும் கூடியது.

உறவின் மிகப்பெரிய சிக்கல் இதுதான்!

உறவில் பயணிப்பது என்பது அந்தரத்தில் ஒற்றைக் கயிற்றில் ஒரு கம்பைப் பிடித்துக்கொண்டு நடக்கும் வித்தைப் போன்றது. கரணம் தப்பினால் மரணம் தான்!. பொருட்களுக்கு மதிப்பு கொடுத்து கவனமாக கையாள நினைக்கின்ற நாம் உறவுகளை மதிப்பிழக்கச் செய்து கவனமற்ற முறையில் கையாளுகிறோம்.

**நம் உறவுகளைக் கையாள்வதில் நமக்கு ஒரு மாபெரும் முன்னோடி இயேசு கிறிஸ்து**. அவர் - நம்மைத் தேடி வந்த நேசம்! ‘நம் ஒவ்வொருவரையும் சொந்தம் பாராட்டியே தீருவேன்’ என்று விடாப்பிடியாக நம்மோடு தம்மைப் பிணைத்துக் கொண்ட உறவு.

இந்தச் சிலுவைப் பதையின் ஒவ்வொரு தளத்திலும் இயேசு தம் உறவு பற்றிய கதையை நமக்குச் சொல்லத் துடிக்கிறார். தாம் அனுபவித்த அன்பை பரிவை, தாம் கண்ட துரோகங்களை, ஏமாற்றங்களை, எல்லாவற்றையும் தாண்டி அந்த உறவுகளைப் பாதுகாக்க தாம் மேற்கொண்ட போராட்டங்களையும், இன்னல்களையும் நமக்குச் சொல்கிறார்.

இயேசுவின் பயணம் நிச்சயம் நம் வாழ்விற்கு மிகப்பெரிய வெளிச்சம் தரும். இயேசுவின் உறவின் பாதையை தியானிக்க அவரோடு பயணிப்போம் வாரீர்.

## *முதல் நிலை;*

## *உறவு ஒன்று கை கழுவப்படுகிறது.!*

**திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி அறிந்த ஸ்தோத்திரம் செய்கின்றோம்.**
**அது ஏனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரச்சித்தீர்.**

### *உறவில் புறக்கணித்தல்*

நான் ஆளுநன் பிலாத்து முன்னால் குற்றவாளிக் கூண்டில் நிற்கிறேன். பாவமறியா நீதிமானாகிய என்னை பாவத்தில் ஊறிய பாவிகள் தீர்ப்பிடுகிறார்கள். "என்னிடம் பாவம் உண்டு என்று உங்களில் யார் எண்பிக்கக்கூடும்?" என்று நான் சவால் விட்டபோது சும்மா இருந்தவர்கள் இப்போது பொய்யாய் குற்றம் சுமத்துகிறார்கள்.

**நான் சீசருக்கு எதிராகப் பேசினேனாம்.**
**ஓய்வுநாளைக் களங்கப்படுத்தினேனாம்.**
**கடவுளின் மகன் என்று சொல்லிக் கொண்டேனாம்.**

இதெல்லாம் வெறும் பசப்பு வார்த்தைகள் என்பது எனக்குத் தெரியும். உண்மையில் இவர்கள் என்மீது சுமத்திய குற்றச்சாட்டு என்ன தெரியுமா.

நான் உங்களை அன்பு செய்தது. என் சொந்தமே, என் பந்தமே, என்று உங்களை அழைத்தது. எப்பொழுதும் உங்களை பற்றி சிந்தித்தது. ஒரு பிச்சைக்காரனைப் போல உங்களிடம் உறவு பிச்சை கேட்டு உங்கள் பின்னாலேயே அலைந்தது.

இது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. இவன் யார் நம்மோடு உறவு பாராட்ட? என்று என் உறவை இடக்கையால் தள்ளி விடுகிறார்கள். ஆகவே தான் எங்களுக்கு பரபாஸ் என்கிற வெறுப்பு தான் வேண்டும்; இயேசு என்கிற அன்பு தேவையில்லை, என்று கூவினார்கள்.

பிலாத்து என்னை சிலுவைச் சாவுக்குத் தீர்ப்பிட்டது கூட எனக்கு வருத்தம் தரவில்லை. "இவனுக்கும், எனக்கும் சம்பந்தம் இல்லை" என்று கை கழுவி விட்டானே, அது தான் என் அடிவயிற்றைப் பிராண்டியது.

நீங்களே சொல்லுங்கள் நண்பர்களே! எத்தனை முறை தான் என் இதயம் புறக்கணிப்பைத் தாங்கிக்கொள்ளும்? **தந்தை சொன்னார் என்பதற்காக மட்டுமல்ல** நான் உங்களை உளமாற நேசித்ததால்தானே இறங்கி வந்தேன். நான் நேசித்த நீங்கள் என் பிறப்பிற்கு இடம் கொடாமல் கதவை சாத்தியது போல, இப்பொழுதும் என் உறவு வேண்டாம் என்று என்னை வெளியே தள்ளி விட்டால் வேறு எங்கு போய் என் பிரியத்தை கொட்டுவது? கல்லிடமா என் காதலை சொல்ல முடியும்?

**செபம்:** இயேசு என்கிற சிநேகமே, சின்னஞ்சிறு சகோதர சகோதரிகளை என் பெயரால் ஏற்றுக்கொள்பவர்கள் என்னையே ஏற்றுக்கொள்வார்கள் என்று சொன்னீரே, நான் பல நேரங்களில் என் உறவுகளை உதாசீனப்படுத்தியிருக்கிறேன் உனக்கும் எனக்கும் இடையே ஒன்றும் இல்லை என்று சொல்லி, பெற்றோரை, பிள்ளைகளை, நண்பர்களை விரட்டியடித்து இருக்கிறேன். என்னை மன்னியும். நான் என் உறவை, அன்பை ஏற்றுக்கொண்டு வாழ அருள் புரியும். ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.**
**மரித்த விசுவாசிகளுடைய ஆத்மாக்கள் சர்வேசனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானம் இளைப்பாறக்கடவது.**

## ***இரண்டாம்நிலை***

**உறவு ஒன்று பாரம் சுமக்கிறது.**

**திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி அறிந்த ஸ்தோத்திரம் செய்கின்றோம்.**

**அது ஏனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரச்சித்தீர்.**

***உறவில் சுமத்தல்.***

படைவீரர்கள் எங்கிருந்தோ ஒரு பெரிய சிலுவையைக் கொண்டு வந்தார்கள். புதிதாக பிறந்த குழந்தையை அரவணைக்கும் தவிப்போடு அதை வாங்கி என் தோளில் அரவணைத்துக் கொண்டேன். இதற்காகத்தானே இவ்வளவு நாள் காத்திருந்தேன். மற்ற எல்லாருக்கும் அது வெறும் இரண்டு மரக்கட்டைகள் தான். எனக்கு மட்டும்தான் தெரியும் என் சிலுவை நான் உங்கள் மீது கொண்ட ஒட்டுமொத்த உறவின் அடையாளம், உங்கள் மீட்பின் அடையாளம் என்று.

**பலருக்கும் உறவுகள் பலவிதத்தில் அர்த்தப்படும்.**

சிலருக்கு உறவுகளை மதிக்க மட்டுமே தெரியும். சிலருக்கு உறவுகளை உதாசீனப்படுத்த மட்டுமே தெரியும். சிலருக்கு உறவுகளோடு பொய்யாக பழகி வஞ்சிக்க மட்டுமே தெரியும். பலருக்கு உறவு என்றால் என்னவென்று கூட தெரியாது.

ஆனால் **நான் கொஞ்சம் வித்தியாசமானவன், எனக்கு உறவில் இன்னும் நெருக்கம் தேவை**. அதனால்தான் நான் என் உறவுகளாகிய உங்களை என் மார்பிலும் தோளிலும் போட்டுக்கொண்டு சுமந்து நடக்கிறேன்.

சிலுவை நான் சேமித்த உறவுகளின் சின்னம். அதனால்தான் அதைத் தழுவிக் கொள்கிறேன். யாரும் கவனிக்காத சமயங்களில் அதன் புறக்கழுத்தில் லேசாக முத்தமிடுகிறேன்.

இது என் சிலுவை! என் உறவு!

ஆமாம். பாரமாகத்தான் இருக்கிறது. ஆனால் இந்தப் பாரம் உன் மீட்புக்காக என்று எண்ணும்போது இப்பாரமான சிலுவை அழகானது. இந்தச் சுமை எனக்குப் பிடித்திருக்கிறது. ஏனெனில் இது நீங்கள் தந்தது நீங்களாகவே ஆனது. என் உறவுகளாகிய நீங்கள், **நான்** தேடிக் கொண்ட புதையல். புதையலை சுமந்து செல்ல யாருக்குத்தான் வலிக்கும்?

***செபம்:*** இயேசு என்கின்ற பிரியமே! “என்னைப் பின்பற்ற விரும்புபவன் தன் சிலுவையைச் சுமந்துகொண்டு என்னைப் பின்பற்றட்டும்” என்று சொன்னீரே, நான் எத்தனையோ முறை என் சொந்தங்களை, உறவுகளை பாரமாக நினைத்து அவர்களை உதறி விட்டு தனியாகப் பயணம் செய்ய முயன்றிருக்கின்றேன், என்னை மன்னியும். உம்மைப் போல என் உறவுகளைச் சுமந்து செல்ல வரம் தாரும்.

ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.**

**மரித்த விசுவாசிகளுடைய ஆத்மாக்கள் சர்வேசனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானம் இளைப்பாறக்கடவது.**

## ***மூன்றாம் நிலை.***

## ***உறவு ஒன்று தரை சாய்கிறது!***

**திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி அறிந்த ஸ்தோத்திரம் செய்கின்றோம். அது ஏனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரச்சித்தீர்.**

### ***உறவில் துரோகம்!***

'நான் முதல் முறையாக தரையில் விழுகிறேன். யாரோ என்னை திட்டுவது என் காதில் விழுகிறது. வீரன் ஒருவன் சாட்டையால் முதுகில் அடிக்கிறான். எழுந்திருக்கச் சொல்லி உத்தரவு போடுகிறார்கள், என் மனதெல்லாம் யூதாஸ் பற்றிய நினைவுகள் தான் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. என்னுடைய 33 வருட உறவுப் பயணத்தில் நான் கற்காத பாடங்களே இல்லை என்று சொல்லலாம். எல்லாம் உறவு சம்பந்தமான பயிற்றுவித்தல்கள்| தான்.

'***பரிவு*** என்றால் என்ன?' என்பதை சிலரும், '**உடனிருப்பு** என்றால் என்ன?' என்பதை சிலரும், '**நம்பிக்கை** என்றால் என்ன?' என்பதை சிலரும், '**புறக்கணித்தல்** என்றால் என்ன? என்பதை சிலரும். '**கைவிடல்** என்றால் என்ன?' என்பதை சிலரும் கற்றுக் கொடுத்தார்கள். '**காட்டிக் கொடுத்தல்** என்றால் என்ன? என்பதை யூதாஸ் எனக்குக் கற்றுக்கொடுத்தான்.

உறவில் - அது ஒரு பச்சைத் துரோகம். அவன் அன்று காட்டிக் கொடுத்தது இயேசு என்கிற தனிப்பட்ட ஒரு நபரை அல்ல; மூன்று வருடங்களாக நானும், அவனும் சேர்ந்து உண்மையாக பழகிப் பழகி உருவாக்கின ஓர் உன்னத உறவை, நட்பை, பகிர்ந்து கொண்ட உணவை, இரகசிய உரையாடல்களை, சேர்ந்து சந்தித்த அவமானங்களை, கூடிச் சிரித்த பொழுதுகளை, அரவணைப்புகளை. பகிர்ந்து கொண்ட அன்பின் முத்தங்களை... இது எல்லாவற்றையும் எப்படி 'அவனால் முப்பது வெள்ளிக் காசுகளுக்கு விலை பேச முடிந்தது? இப்படிப்பட்ட ஒரு உறவை எப்படி அவனால் ஒரு முத்தத்தில் முடித்துக்கொள்ள முடிந்தது?

எனக்கு ஆத்திரமும், அழுகையுமாக வருகிறது. துரோகம் தந்த வலியில் துடித்தவனாய், மண்ணிலேயே எழ மனமில்லாமல் கிடக்கின்றேன்.

***செபம்***: இயேசு என்கின்ற தோழமையே, "விண்ணகத்தில் உங்கள் செல்வத்தை சேருங்கள்" என்று சொன்னீரே, உறவை விலை பேசி கொச்சைப்படுத்திய யூதசைப் போல, நானும் எத்தனையோ முறை சொத்துக்காக, மண்ணிற்காக, பணத்திற்காக, பொன்னிற்காக என் உறவுகளை விலைபேசியிருக்கிறேன். கொச்சைப்படுத்தியிருக்கிறேன், அவமானப்படுத்தியிருக்கிறேன். என்னை மன்னியும். உறவைவிட உயர்ந்த சொத்து எதுவுமில்லை என்பதை உணரச் செய்யும். ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.**

**மரித்த விசுவாசிகளுடைய ஆத்மாக்கள் சர்வேசனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானம் இளைப்பாறக்கடவது.**

## ***<u>நான்காம் நிலை.</u>***

## **உறவும், உறவும் சந்தித்துக் கொள்கின்றன.**

**திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி அறிந்த ஸ்தோத்திரம் செய்கின்றோம். அது ஏனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரச்சித்தீர்.**

**உறவில் மௌனம்:**

என் மானிடப் பிறப்பின் மிகப்பெரிய சந்தோஷம் என் அம்மா. அவர் முகத்தைப் பார்த்து தானே நான் வளர்ந்தேன். அவர்தான் என் முதல் சொந்தம். அவர் குறித்து நான் கடவுளுக்கு நன்றி சொல்லாத நாளே இல்லை. அவர் மட்டும் என் பக்கமாக நடந்து வந்திராவிட்டால் என் சிலுவைப் பயணம் இன்னும் வலியும், வேதனையும் மிகுந்ததாக இருந்திருக்கும்.

ஒரே ஒரு முறை நாங்கள் இருவரும் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டோம். எப்பொழுதும் அதிகம் பேசாத என் அம்மா இப்போதும் எதுவும் பேசவில்லை. மௌனமாக என்னை பார்த்தார். **நான் வாய் திறந்து சொல்லித்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்று எதுவும் இல்லை.** அவர் வாய் திறந்து சொல்லித்தான் நான் புரிந்து கொள்ள வேண்டும் என்று எதுவும் இல்லை.

சுற்றிலும் ஒரே இரைச்சல், பலரும் பலவிதமாகப் பேசுகிறார்கள். **அவனை இழுத்து வாங்கடா என்கிறான் ஒருவன்.**

மற்றவனோ தள்ளிப்போங்க தள்ளிப்போங்க என்று கூட்டத்தினரை விரட்டுகிறான்.

பெரிய புதுமை எல்லாம் செய்தான், இப்பொழுது இவன் சிலுவையை சுமக்கிறான் பாருங்கள் என்றான் ஒருவன்.

மற்றவனோ, **அவனை சீக்கிரம் கொண்டு போய் சிலுவையில் அறையுங்கள்** என்றான்.

இப்படிப்பட்ட எல்லா சத்தங்களையும் என் அம்மாவின் மௌனமொழி அடக்கியது. **அந்த மௌனம் வல்லமை வாய்ந்தது.** ஆயிரம் வார்த்தைகளை விட அர்த்தம் மிகுந்தது.

தென்றலின் வழியாக எலியாவிடம் பேசிய என் தந்தை, இப்போது என் அம்மாவின் கண்களின் வழியாக, மௌன மொழிகள் வழியாக என்னோடு பேசுகிறார். துயரத்தில் இருக்கும் ஒருவனுக்கு ஒரு மௌனமான உடனிருப்பு எவ்வளவு ஆறுதல் தரும் என்பதை என் அம்மாவின் மௌன பிரசன்னத்தால் உணர்ந்துகொண்டேன்.

***<u>செபம்</u>***: இயேசு என்கின்ற பரிவே! நான் தனிமையில் இருந்தபோது என்னை காண வந்த நீங்கள் பேறு பெற்றவர்கள் என்று சொன்னீரே! கஷ்டமான சூழ்நிலைகளை கடந்து கொண்டிருக்கும் என் சகோதர சகோதரிகளுக்கு என் வார்த்தையாலும், நடவடிக்கையாலும், அவர்கள் துயரத்தை இரட்டிப்பாக்காமல், எம் கன்னி மரியாவைப் போல என் மௌனத்தால், ஜெபத்தால், ஆறுதல் தரும் மொழியால், உடனிருப்பால், பலமும், உறுதியும் தர வரம் தாரும் ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.**

***மரித்த விசுவாசிகளுடைய ஆத்மாக்கள் சர்வேசனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானம் இளைப்பாறக்கடவது.***

## ஐந்தாம் நிலை.
## உறவு ஒன்று கைகொடுக்கிறது.

**திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி அறிந்த ஸ்தோத்திரம் செய்கின்றோம்.**

***அது ஏனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரச்சித்தீர்.***

**உறவில் உதவி.**

உறவு ஒன்று இருப்பது எதற்கு? சொந்தக்காரர்கள் 4 பேர் வேண்டும் என்று சொல்வது எதற்கு? கஷ்டத்தில் ஓடிவந்து ஒத்தாசை செய்ய தானே! தடுமாறி கீழே விழுந்தால், என் கையை பற்றி எழுந்திடு என்று சொல்லி கைதூக்கி விடுவதற்கு தானே! எனக்கு அப்படி ஒரு உதவும் கை அவசரமாக தேவைப்பட்டது. சிரேன் ஊரானாகிய சீமோனை எனக்கு உதவி செய்ய சொல்லி படைவீரர்கள் கட்டாயப்படுத்துகிறார்கள்.

சீரேன் ஊரை பற்றி நான் கேள்விப்பட்டதில்லை, சீமோனை நான் முன்பின் கூட பார்த்ததில்லை, அவனோடு பேசியதும் இல்லை, எனக்கு சீமோன் ரத்த உறவு எதுவுமில்லை, அவனோடு எனக்கு எந்த ஒட்டும், உறவும் இருக்கவில்லை.

உறவுக்காரர்கள் என்று சொல்லிக்கொண்ட யாரும் எனக்கு உதவி செய்ய வராத நிலையில், ஓடி ஒளிந்து கொண்ட நிலையில், எனக்கு உதவி செய்து சீமோன் என் உறவுக்காரன் ஆகிறான்.

நான் யோசித்துப் பார்க்கிறேன் **3 வருட பணி வாழ்க்கையில் நான் எத்தனை பேருக்கு உதவி செய்திருக்கிறேன். பெத்சாய்தா வனாந்தரத்திலே ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும், 5000 பேருக்கு பகிர்ந்தளித்தேனே அவர்களில் ஒருவன் கூடவா இங்கு இல்லை?**

நயின் நகர விதவையின் ஒரே மகன் இறந்துவிட, அவன் பாடையைத் தொட்டு அவனுக்கு உயிர் கொடுத்தேனே, அவன் மீண்டும் செத்தா போய் விட்டான்?

தாவீதின் மகனே, தாவீதின் மகனே, என் மேல் இரக்கம் வையும் என்று கூவின பிறவி குருடனுக்கு பார்வை தந்தேனே எங்கே போனான் அவன்?

பத்து தொழு நோயாளர்கள் குணம் பெற்றபோது ஒரே ஒரு புறவினத்தான் வந்து நன்றி சொல்லிய போது நான் கூறிய அதே வார்த்தையை மீண்டும் உங்களுக்குக் கூறுகிறேன், உங்கள் கடவுள் உங்களுக்காக கஷ்டப்படுகிற பொழுது, துயருறும் போது, ஓடி வந்து உதவி செய்ய, கைகொடுத்து தூக்கிவிட, உடன் நடக்க, இந்த அன்னியனாகிய சீமானை தவிர வேறு யாரும் இங்கு இல்லையா?

***செபம்***: இயேசு என்கின்ற நட்பே! "உங்களை யாராவது ஒரு கல் தொலைவரக் கட்டாயப்படுத்தினால் அவர்களோடு இரு கல் தொலைவரை செல்லுங்கள்" என்று சொன்னீரே! எத்தனையோ முறை என் உறவுகள் கஷ்டத்தில் வாழ்ந்த போதும் நான் பாராமுகமாய் இருந்திருக்கின்றன். அவன் கஷ்டப்பட்டால் எனக்கென்ன என்று சுயநலத்தோடு வாழ்ந்திருக்கின்றேன். உதவி செய்ய வாய்ப்பிருந்தும், உதவி செய்ய மறந்திருக்கின்றேன் மறுத்திருக்கின்றேன். அதற்காக மனம் வருந்துகிறேன். உண்மையான உறவுக்காரன் சீமோனைப் போல வாழ வரம் தாரும். ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.**

***மரித்த விசுவாசிகளுடைய ஆத்மாக்கள் சர்வேசனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானம் இளைப்பாறக்கடவது.***

## ஆறாம் நிலை.

## உறவு ஒன்று களங்கம் துடைக்கிறது.

**திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி அறிந்த ஸ்தோத்திரம் செய்கின்றோம்.**
**அது ஏனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரச்சித்தீர்.**

**உறவில் உடனிருத்தல்.**

நான் களையப்பட்டு நிற்கின்றேன். என் 33 வருட உறவு பயணம் எனக்கு கற்றுக்கொடுத்த கசப்பான பாடங்களில் ஒன்று, **மனிதர்கள் மிக எளிதாக மாறி விடுகிறார்கள்** என்பதுதான். எனக்கும் ஒரு காலம் இருந்தது. அப்போது சிலர் என்னை பார்த்து "**இதோ மாபெரும் இறைவாக்கினர் தோன்றியிருக்கிறார்**" என்றார்கள். நான் கொடுத்த அப்பங்களை வயிறார உண்ட மக்கள் என்னைப் பிடித்த அரசனாக விரும்பினார்கள்.

சிலர், "**இதுபோன்ற வியத்தகு செயல்களை நாங்கள் ஒருபோதும் கண்டதில்லை**" என்று ஆச்சரியப்பட்டார்கள். ஒரு பெண்மணி, "**என்னைப் பெற்றெடுத்த வயிறும் நான் பால்குடித்த கொங்கைகளும் பேறு பெற்றவை**" என்று கூவினாள். என்னைத் தொட வேண்டும் என்றும், என் ஆடைகளின் விளிம்பையாவது தொட்டு விட வேண்டும் என்றும், பலர் ஆவலோடு என்னிடம் வந்தனர். என் முகத்தைப் பார்க்க, என்னோடு பேச, நான் பேசுவதைக் கேட்க மக்கள் கூட்டம் கூட்டமாக கூடினார்கள்.

அன்றோ, அது ஒரு வசந்த காலம். பெருமையின் காலம். இன்றோ, இது அவமானத்தின் நேரம் அவர்களில் யாரும் இப்போது என்னுடன் இல்லை. நான் தாபோர் மலையில் உருமாறிய போது, "**ஆண்டவரே உமக்கு ஒன்றும், மோசேக்கு ஒன்றும், எலியாவுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களை அமைப்பேன்**" என்று சொன்ன பேதுரு இப்போது இங்கே இல்லை. **ஒருவேளை இந்த அசிங்கமான முகத்தை உடையவனை, அவமானத்தில் கூனிக் குறுகி நிற்கிறவனை, என் தலைவன் என் நண்பன் என் சொந்தக்காரன், என்று சொல்லிக்கொள்ள பேதுருவுக்கு** கூச்சமாக இருந்ததோ என்னவோ.

ஆனால் வீரப்பெண்மணி வெரோணிக்கா அப்படியில்லை. நான் எவ்வளவு அவலட்சணமாக இருந்தால்தான் என்ன, என் ஆடைகள் அலங்கோலப்பட்டு கிழிந்திருந்தால் என்ன? நான் எவ்வளவு அவமானமாக இருந்தால் என்ன? வெரோனிக்கா **என் பக்கத்தில் வந்தாள், என் அருகில் நின்றாள், எனக்கு இவரை பிடிக்கும், இவர் எனக்கு சொந்தம் என்று சொன்னாள் என் முகத்தை துடைக்கிறாள், மனித உறவின் மீது எனக்கிருந்த அவநம்பிக்கையையும், வெறுமையையும் துடைக்கிறார்**.

வெரோனிகா - அணைய இருந்த ஓர் விளக்கின் உறவின் வெளிச்சம்.

***செபம்***: இயேசு என்கின்ற பந்தமே! "உங்களில் பாவம் செய்யாதவன் முதலில் இவள் மேல் கல் எறியட்டும்" என்று சொல்லி விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணிற்காக வாதிட்டாரே, சந்தர்ப்ப சூழ்நிலையால் என் உறவுகள் அவமானப்பட்டு நிற்கும்போது, எங்கே அவர்களோடு சேர்ந்து நின்றால் என் நற்பெயர் கெட்டு விடுமோ, என்னையும் மற்றவர்கள் தப்பாகப் பேசுவார்களோ என்று பயந்து ஒதுங்கி நின்றிருக்கின்றேன். என்னை மன்னியும். வெரோணிக்காவைப் போல எல்லா சூழ்நிலைகளிலும் என் சொந்தங்களோடு சேர்ந்து நிற்று அவர்களின் துயர் துடைக்கும் நல்ல உறவுக்காரனாக என்னை மாற்றும். ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.**
**மரித்த விசுவாசிகளுடைய ஆத்மாக்கள் சர்வேசனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானம் இளைப்பாறக்கடவது.**

## ஏழாம் நிலை.

## உறவு ஒன்று களங்கம் துடைக்கிறது.

**திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி அறிந்த ஸ்தோத்திரம் செய்கின்றோம். அது ஏனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரச்சித்தீர்.**

### உறவில் தாழ்ச்சி.

கல்வாரி நோக்கி கால்கடுக்க நடக்கிறேன். அயர்ச்சியாக இருக்கிறது. நேற்றிரவு, சீடர்களோடு மேல் மாடி அறையில் சாப்பிட்டது. அதன்பின் பச்சைத் தண்ணீர் கூட வாயில் படவில்லை. உடல் ஒத்துழைக்க மறுக்கிறது. திமிர்வாதக்காரனை நோக்கி "**உன் படுக்கையைத் தூக்கிக் கொண்டு எழுந்து நட**" என்று சொன்னவன், பேதுருவிடம் "**தைரியமாக வா**" என்று சொல்லி தண்ணீரில் நடக்க வைத்தவன், இப்பொழுது நானே கண் ஒளி மங்கி நடக்க முடியாமல் நிலைதடுமாறி கீழே விழுகின்றேன்.

மனித உறவுகளை தற்பெருமையும் அகம்பாவமும் எப்படி சீரழிக்கிறது என்ற சிந்தனைகள் என் மனதை ஆக்கிரமிக்கின்றன. தாழ்ச்சி என்பதே காணக்கிடைக்காத பொருளாக மாறி விடுமோ என்று பயப்படுகிறேன். ஆண்டவரின் இல்லத்திற்கு சென்று "ஆண்டவரே நான் மிகவும் நல்லவன், நாள் தவறாமல் நோன்பு இருக்கிறேன், ஏழைகளுக்கு உதவி செய்கிறேன், என்னை போல யோக்கியன் யாருமில்லை, என்று வீண் தம்பட்டம் அடித்து கடவுளின் நேசத்திற்குள் வராமலேயே திரும்பிப் போனானே பரிசேயன், அவனை உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?

வீட்டிற்குள் விருந்தும் நடனமும் இசையும் நடந்துகொண்டிருந்தபோது "**நல்லவனான எனக்கு ஒரு ஆட்டுக்குட்டி கூட தந்ததில்லை, ஊதாரியாக வாழ்ந்த இவனுக்கு கொழுத்த கன்றை அடித்திருக்கிறீரே**" என்று சொல்லி உறவு வளையத்திற்கு வெளியே நின்று தன் அகம்பாவத்தில் பொறுமிக்கொண்டிருந்தானே, ஊதாரி மைந்தனின் மூத்த சகோதரன் அவனை உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? **ஆணவம் தான் உறவுக்கு முதல் எதிரி!** நான் ஆணவம் அற்றவன், என் அன்பை வெளிக்காட்ட, என் நட்பிற்காக நான் எந்த அளவிற்கு கீழே இறங்கி செல்வேன், என்னையே தாழ்த்துவேன், என்பதை காட்டுவதற்கு தான் நான் என் சீடர்களுடைய பாதங்களை கழுவினேன்.

எனக்கு ஆணவம் இல்லை. எனக்கு கௌரவம் பெரிதல்ல. எனக்கு உன் உறவு மட்டுமே வேண்டும், **ஆம் உன் உறவு மட்டுமே வேண்டும்.** எனக்கு நீ தான் முக்கியம், அதனால்தான் இந்த அளவிற்கு என்னையே தாழ்த்திக் கொண்டேன். இன்னமும் தாழ்த்திக் கொள்வேன்.

***செபம்***: இயேசு என்கின்ற அரவணைப்பே! "**என்னிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள் நான் சாந்தமும் மனத்தாழ்ச்சியும் உடையவன்**" என்று சொன்னீரே, என் ஆணவத்தினால் அகம்பாவத்தினால் நான் பெரியவன் என்ற மமதையினால் நான் எத்தனையோ நல்ல உறவுகளை, நல்ல நட்புகளை இழந்து இருக்கிறேன். என்னை மன்னியும். நான் விட்டுக் கொடுத்து, கொஞ்சம் இறங்கி வந்து, என்னைத் தாழ்த்திக் கொண்டு, என் உறவுகளைக் காப்பாற்றி, உயர்த்திப் பிடிக்க வரம் தாரும். ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.**
**மரித்த விசுவாசிகளுடைய ஆத்மாக்கள் சர்வேசனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானம் இளைப்பாறக்கடவது.**

## எட்டாம் நிலை

## உறவு ஒன்று ஆறுதல் தருகிறது.

**திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி அறிந்த ஸ்தோத்திரம் செய்கின்றோம்.**
**அது ஏனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரச்சித்தீர்.**

### உறவில் கண்ணீர்.

என் சிலுவைப் பாதையின் ஒரு மூலையில் எருசலேம் மகளிர் எனக்காக அழுது கொண்டிருக்கிறார்கள். யார் இந்த பெண்கள்... எனக்கு தெரியவில்லை, இதற்குமுன் நான் இவர்களை எங்காவது சந்தித்திருக்கிறேனா, பார்த்திருக்கிறேனா, அதுவும் தெரியவில்லை. ஆனாலும், சிலுவை சுமக்கும் எனக்காக இவர்கள் விடும் கண்ணீர் எனக்கு எவ்வளவோ ஆறுதல் தருகிறது. **அழுகையை போன்று ஒரு ஆறுதலான விஷயம் எதுவுமில்லை** என்பதை உணருகிறேன். எல்லா உறவு வரலாற்றிலும் கண்ணீருக்கென்று ஒரு தனி அத்தியாயம் உண்டு.

எத்தனையோ நம்பிக்கை துரோகங்களை கண்ணீர் மன்னித்திருக்கிறது. எத்தனையோ காயங்களை கண்ணீர் ஆற்றியிருக்கின்றது. எத்தனையோ கோபக் கனல்கலை கண்ணீர் அணைத்திருக்கிறது. எத்தனைப் பிரிவுகளைத் கண்ணீர் சேர்த்திருக்கின்றது.

நானும் அழுதிருக்கிறேன். "இறந்து போன என் நண்பர் லாசருக்காக ஒரு முறை அழுதேன்". "என் குரல் கேட்டு திருந்த மறுத்த எருசலேமை பார்த்து ஒரு முறை அழுதேன்". உங்கள் கடவுளுக்கு கண்ணீர் பற்றி தெரியாது என நினைத்து விடாதீர்கள்.

என் வாழ்வில் ஒரு சிலரை என்னால் மறக்கவே முடியாது. பெத்தானியாவில் என்னைக் கண்டவுடன் உள்ளம் குமுறி அழுத **மார்த்தா - மரியா**. சீமோன் வீட்டில் என் காலடியில் அமர்ந்து கண்ணீரால் என் பாதங்களை கழுவி தன் கூந்தலால் அதைத் துடைத்த அந்தப் **பாவி பெண்**. தன்னுடைய மகளுக்காக என்னிடம் அழுது மன்றாடிய அந்த **கனானியப் தாய்**. விடியும் முன்பே என் கல்லறையில் வந்து "என் ஆண்டவரின் உடலை காணவில்லையே, அவரை யார் எடுத்துச் சென்றார்களோ தெரியவில்லையே என்று அழுது புலம்பிய **மகதலா மரியா**. இறந்த என் உடலை தன் மடியில் வைத்து அழுது புலம்பிய **என் தாய் அன்னை மரியா**... இவர்களையெல்லாம் எப்படி மறக்க முடியும் என்னால்? இவர்கள் அனைவரும் எனக்காக அழுதவர்கள் அல்லவா.

அன்பைச் சொல்ல கண்ணீரை விட அழகான வழி ஏதுமில்லை. என் மேல் உனக்கு கொஞ்சமாவது அன்பு இருக்கிறதா? ஒருமுறை கண்ணீர் விடேன், எனக்காக, உனக்கு தெரியுமா? உன் கண்ணீரை நான் பொக்கிஷமாக நினைக்கிறேன். உன் கண்ணீரை என் தோற்ப்பையில் சேர்த்து வைத்திருக்கிறேன். உனக்காக சிலுவை சுமக்கும் எனக்காக ஒருமுறை கண்ணீர் விடு.

***செபம்***: இயேசு என்கின்ற தோழமையே! "இப்பொழுது அழுவோரே நீங்கள் ஆறுதல் பெறுவீர்கள்" என்று சொன்னீரே, பல நேரங்களில் என் இதயம் பாறை போல் இறுகிக் கிடக்கிறது. யாரும் எனக்குத் தேவையில்லை என்ற ஆணவத்தில் நான் இருந்திருக்கிறேன். என் இதயத்தை மாற்றும். என் கண்ணீரால் மற்றவர்களுக்கு ஆறுதல் தர, உறவை வளர்க்க, பலப்படுத்த, வரம் தாரும். ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.**

***மரித்த விசுவாசிகளுடைய ஆத்மாக்கள் சர்வேசனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானம் இளைப்பாறக்கடவது.***

## ஒன்பதாம் நிலை.

## உறவு மீண்டும் மீண்டும் விழுகிறது.

**திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி அறிந்த ஸ்தோத்திரம் செய்கின்றோம்.**

**அது ஏனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரச்சித்தீர்.**

**உறவில் புரிதல்.**

நான் கொல்லப்பட வேண்டிய இடமான கொல்கொதா கண்ணில் தெரிகிறது. இன்னும் சற்று தூரம் தான். போய் சேர்ந்து விடலாம் என்று நினைத்த போதே வலுவில்லாமல் மீண்டும் ஒருமுறை விழுகிறேன். முதுகில் சாயும் பாரமான சிலுவை என் முகத்தைப் பூமியோடு அழுத்துகிறது. முள்முடி இறுக்கி வழிகின்ற இரத்தத்தால் கண்களில் ஒரே எரிச்சல். யாரோ ஒரு வீரன் என் இடுப்பில் எட்டி உதைக்கிறான். இங்கேயே மடிந்தால் பரவாயில்லை என்றிருக்கிறது.

உடல் வலியையும், சிலுவை பாரத்தையும் விட, என் மூன்று வருட பணி வாழ்க்கையில் என்னை யாரும் சரியாக புரிந்து கொள்ளவில்லையே என்ற எண்ணம் தான் எனக்கு அதிக வேதனையை தருகிறது. மண்ணில் கிடந்தவாறு யோசிக்கிறேன். எல்லா உறவிற்கும் சரியான புரிதல் அவசியம். கணவன்-மனைவி உறவாக இருக்கலாம், பெற்றோர் பிள்ளை உறவாக இருக்கலாம், சகோதரன் சகோதரி உறவாக இருக்கலாம், அனைத்திற்கும் புரிதல் மிக அவசியம். புரிதல் இல்லாத உறவு கடற்கரையில் கட்டிய வீட்டை போல, சுலபமாக கட்டலாம் ஆனால் வெகு சீக்கிரமே அழிந்துவிடும். உலகு அனைத்தையும் என் உறவாக்கிக் கொள்ள வேண்டும் என்று மிகுந்த ஆசையோடு உலகிற்கு வந்தவன் நான். ஆனால் இந்த உலகம் என்னை கடைசிவரை புரிந்து கொள்ளவே இல்லை.

நான் ஊர் ஊராகச் சென்று ஏழைகளுக்கு நற்செய்தி அறிவித்துக் கொண்டிருந்தேன். சட்ட திட்டங்களை விட மனிதர்கள் முக்கியம் என்று, மனிதநேயம் முக்கியம் என்று கூறி மனிதநேயத்தை கடைபிடித்தேன். ஆனால் மறைநூல் அறிஞர்கள் "நான் ஓய்வுநாளை அவமதிக்கிறேன்" என்று குற்றம் சாட்டினார்கள். பேய் பிடித்து யாருக்கும் அடங்காமல் சுற்றியவனை நான் குணமாக்கினேன். நான் செய்த நல்லதை புரிந்து கொள்ளாமல் அவ்வூர் மக்கள் என்னிடம் "தயவு செய்து எங்கள் ஊரை விட்டுப் போய் விடுங்கள்" என்று சொன்னார்கள். நானே வானினின்று இறங்கி வந்த உயிருள்ள உணவு என்ற உண்மையை கூறினேன் என் சீடர்கள் பலர் என்னை புரிந்து கொள்ளாமல் விலகிச் சென்றனர்.

நான் உண்மை பேசினேன். பிலாத்து, உண்மையா அது என்ன என்று என்னை புரிந்து கொள்ளாமலே கேட்கிறான். கடைசி வரை நானும், உங்கள் மீது நான் கொண்ட அன்பும் யாராலுமே புரிந்து கொள்ளப்படவேயில்லை. உன்னை அன்பு செய்கிறேன் என்று கூறி உன்னை நோக்கி வந்த என்னை புரிந்து கொள்ளாமலேயே கொல்லத் துடிக்கிறாயே, இன்னும் என் அன்பை நான் உனக்கு எப்படி விளக்குவேன் என்றே எனக்கு தெரியவில்லை. இதோ என் உயிரையே கொடுக்கிறேன் என் அன்பை உனக்கு விளக்க.

***செபம்***: இயேசு என்கின்ற பாசப் பிணைப்பே! "**நானும் என் தந்தையும் ஒன்றே என்னைக் கண்டவன் என் தந்தையை கண்டான்**" என்று சொன்னீரே, எத்தனையோ உறவுகளை சரியாக புரிந்து கொள்ளாமல் உதாசீனப்படுத்தி இருக்கிறேன். ஒரே வீட்டில் வாழ்ந்தும் சரியான புரிதல் இல்லாமல் ஏதோ அன்னியர் போல் தனித்து நின்று இருக்கிறேன். என் உறவைப் புரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். எனக்கு துணையாக வாரும். **நீர் தந்தையையும் தந்தை உண்மையும் புரிந்து கொண்டது போல நான் அனைவரையும் புரிந்துகொள்ள வரம் தாரும்**. ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.**

**மரித்த விசுவாசிகளுடைய ஆத்மாக்கள் சர்வேசனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானம் இளைப்பாறக்கடவது.**

**பத்தாம் நிலை.**

**உறவு ஒன்று அவமானப்படுகிறது.**

**திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி அறிந்த ஸ்தோத்திரம் செய்கின்றோம்.**
**அது ஏனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரச்சித்தீர்.**

**உறவில் இழத்தல்.**

ஒரு வழியாக கொல்கொதா வந்து சேர்ந்தாயிற்று. இப்போது என்னிடம் எஞ்சியிருப்பது எல்லாம் ஓர் உடலும், கொஞ்சம் உயிரும், கிழிந்த ஆடைகளும்தான். உடைகளைக் களைகிறார்கள். காயங்களோடு ஒட்டியிருந்த துணியைப் பலவந்தமாகப் பிடுங்குகிறார்கள். வலி உயிர் போகிறது. ஆடை இழந்த வெட்கம் என்னைப் பிடிங்கி தின்கிறது. நான் மறுப்பேதும் சொல்லவில்லை.

இழப்பது என்று முடிவெடுத்த பின்பு இதைத்தான் இழக்க வேண்டும், அதை இழக்க கூடாது என்கின்ற விதிவிலக்கு ஏதேனும் உண்டா? **மீண்டும் சொல்கிறேன்**, எனக்கு இந்த ஆடை முக்கியமல்ல, நீங்கள் தான் முக்கியம். உங்கள் மீது கொண்ட அன்பிற்காக இந்த உச்சபட்ச அவமானத்தையும் அன்போடு ஏற்றுக் கொள்கிறேன். உன் அன்பை வார்த்தையில் அல்ல வாழ்க்கையில் காட்டு என்று கூறினேன். அதை இன்று உனக்காக செய்து காட்டுகின்றேன். கொடுக்காமல் அன்பு வருவதில்லை. இழக்காமல் உறவு வளர்வதில்லை. உங்களுக்கும் எனக்கும் இடையேயான இந்த நேச உறவு வளர்வதற்காக நான் என் ஆடைகளை மட்டுமல்ல எதையும் இழக்க துணிந்து விட்டேன்.

ஆனால் நீங்கள் அனைத்தையும் சேர்த்து வைத்து, அபகரிப்பு செய்து உறவை இழக்கிறீர்கள், அது என் நினைவுக்கு வருகிறது. என் வேதனையை அதிகமாக்குகிறது. ஏழை லாசருக்காக கொஞ்சம் உணவை கூட இழக்க விரும்பாத பணக்காரன். "களஞ்சியங்கள் எல்லாம் நிரம்பியிருக்கிறது, நெஞ்சே உண்டு குடித்து மகிழ்" என்று சொல்லிக்கொண்ட செல்வந்த பிரபு. உன்னிடம் இன்னும் ஒன்று குறைவாய் உள்ளது நீ போய் உன் உடமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடு என்று சொன்னபோது முகவாட்டத்தோடு திரும்பிப் போன வசதிபடைத்த இளைஞன். இவர்களெல்லாம் இழக்க மனம் இல்லாதவர்கள்.

ஒரு பிரியத்திற்காக, உன் உறவிற்காக, நீ மற்றவர்கள் மீது கொண்ட நேசத்திற்காக, உன் உடமையை, நேரத்தை, வசதி, வாய்ப்புகளை, தனிமையை, கொஞ்சம் கவுரவத்தை, ஏன் தன்மானத்தை கூட இழக்கத் தயாரில்லை என்றால் நீ உறவு வாழ்க்கைக்கு தகுதியற்றவன். என்னை பார், உனக்காக எல்லாம் இழந்தவன் நான்.

***செபம்***: இயேசு என்கின்ற ஆறுதலே! "**கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால் ஒழிய அது பலன் தராது**" என்று சொன்னீரே, என் வாழ்வின் பயனே, பொருட்களால் என்னை நிரப்பி கொள்வதில்தான் இருக்கிறது என்று எண்ணி எதையும் பிறருக்கு கொடுக்கவும், இழக்கவும் மனமில்லாமல் இருந்திருக்கிறேன். என்னை மன்னியும். உம்முடைய கடைசி சொட்டு ரத்தம் வரை சிந்தி உம்மையே எனக்காக இழந்தீரே, உம்மைப் போல நானும் என் உறவுகளுக்காக என்னையே இழக்க வரம் தாரும். ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.**
**மரித்த விசுவாசிகளுடைய ஆத்மாக்கள் சர்வேசனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானம் இளைப்பாறக்கடவது.**

**பதினொன்றாம் நிலை.**

**எனக்காக என் உறவு ஒன்று அறையப்படுகிறது.**

**திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி அறிந்த ஸ்தோத்திரம் செய்கின்றோம்.**
**அது ஏனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரச்சித்தீர்.**

**உறவில் வார்த்தைகள்.**

நான் சுமந்து வந்த சிலுவையில் என்னை படுக்க வைத்து பெரிய பெரிய ஆணிகள் கொண்டு அறைகிறார்கள் என்னை. ஏற்கனவே அதிகமாக நைந்திருந்த என் கரங்களிலும் கால்களிலும் ஆணிகள் வெகுவிரைவாக இறங்குகிறது. என் உடலில் எஞ்சியிருந்த ரத்தம் அனைத்தும் தரையில் விழுகிறது. நான் வேதனையின் உச்சத்தில் "**அப்பா, அப்பா**" என்று கதறுகிறேன். அவருக்கு காதில் விழுந்ததாக தெரியவில்லை.

என் கரங்களிலும் கால்களிலும் இறங்கிய ஆணிகள் வலியை கொடுத்தன, **உண்மைதான்.** ஆனால் அதைவிட அதிக வலியைக் கொடுத்தது மனிதர்களின் வார்த்தைகள். மனிதர்கள் வார்த்தைகளை எப்படி எல்லாம் பயன்படுத்துகிறார்கள். ஆனால் நான் வார்த்தையானவன். தொடக்கம் முதலே கடவுளோடும் கடவுளாயும் இருந்த வார்த்தை நான்.

என் வார்த்தைகளை கேட்டு சிலர் நலம் பெற்றனர். புயல் காற்று அடங்கியது. திமிர்வாதக்காரன் எழுந்து நடந்தான். இறந்தவர்கள் உயிர்த்தெழுந்தார்கள், பாவிகள் மனம் திரும்பினார்கள், அழுதவர்கள் ஆறுதல் பெற்றார்கள், தீய ஆவி. எதுவும் பேசாமல் அலறியடித்து ஓடியது.

எப்போதும் நல்ல வார்த்தைகளையும் நலம்தரும் வார்த்தைகளையும் பேசினேன். யார் மனதும் காயப்பட்டு விடக்கூடாது என்பதற்காக கவனமாக வார்த்தைகளை பயன்படுத்தினேன். ஆனால், எனக்கு கிடைத்த வார்த்தைகள் எப்படிப்பட்டவை தெரியுமா? என் கரங்களிலும் கால்களிலும் சென்ற ஆண்களைவிட இதயத்தை அதிகமாக பிளக்க கூடிய வார்த்தைகள்.

என்னைப் பார்த்து பெருந்தீனிகாரன், குடிகாரன், மதி மயங்கி விட்டான், இவனுக்குப் பேய் பிடித்திருக்கிறது, இவன் பெயல்செபூலைக் கொண்டு பேய்களை ஓட்டுகிறான், இவன் கடவுளைப் பழித்துரைக்கிறான் என்று சொன்னார்கள். மேலும் "நீ கடவுளின் மகனாக இருந்தால் சிலுவையிலிருந்து கீழே இறங்கி வா" என்றார்கள். என் கைகளிலும் கால்களிலும் குத்திய ஆண்களைவிட இந்த வார்த்தைகள் என் நெஞ்சை அதிகமாக குத்தின.

***செபம்***: இயேசு என்கின்ற இனிய வார்த்தையே! உன் பேச்சு 'ஆம்' என்றால் 'ஆம்', 'இல்லை' என்றால் 'இல்லை' என்றிருக்கட்டும் என்று சொன்னீரே, எத்தனையோ நேரங்களில் மனசாட்சியே இல்லாமல் என்னுடைய கூரிய வார்த்தைகளால் என் சகோதர சகோதரிகளின் இதயத்தை கிழித்து காயப்படுத்தி இருக்கிறேன். என்னை மன்னியும். உம்மைப்போல நானும் எப்போதும் நலம் தரும் வார்த்தையை பயன்படுத்தி உறவை பலப்படுத்த வரம் தாரும். ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.**
**மரித்த விசுவாசிகளுடைய ஆத்மாக்கள் சர்வேசனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானம் இளைப்பாறக்கடவது.**

**பன்னிரண்டாவது நிலை.**

**என் உறவின் சிகரம் எனக்காக உயிர் விடுகிறது.**

**திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி அறிந்த ஸ்தோத்திரம் செய்கின்றோம்.**
**அது ஏனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரச்சித்தீர்.**

**உறவில் மன்னிப்பு.**

இதுவரை நான் சுமந்து வந்த சிலுவை இப்போது என்னை சுமக்கின்ற நேரம். வானத்துக்கும் பூமிக்கும் இடையே நான் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறேன். திடீரென இருட்டத் தொடங்குகிறது. தூரத்தில் கல்லறைகள் பிளக்கும் சத்தம். எனது மனமெல்லாம் உன்னை பற்றிய நினைவுதான். ஆம், உன்னைப் பற்றிய நினைவுதான். நான் பச்சிளம் குழந்தையாய் இருந்தபோது என்னை கரங்களில் ஏந்திய சிமியோன், "இவன் எதிர்க்கப்படும் அறிகுறியாக இருப்பான்" என்று மட்டும் சொன்னாரே தவிர, இப்படி 33 வயதிலேயே அநியாயமாக செத்துப் போய் விடுவேன் என்று சொல்லவில்லை.

உங்கள் மீது எனக்கு எவ்வளவு அன்பு தெரியுமா? நீங்கள் தான் என்னையும் என் அன்பையும் இறுதிவரை புரிந்துகொள்ளவே இல்லை. உங்களைத் தொடர்ந்து அன்பு செய்வதும் உங்களோடு தொடர்ந்து உறவு கொண்டாடுவதும் தான் என் **வரமும் சாபமும்** என் **மகிழ்ச்சியும் துக்கமும்** என் **மணிமுடியும் முள்முடியும்**.

உங்கள் மேல் எனக்குள்ள அன்பை காட்ட என்னிடம் இருக்கும் கடைசி அஸ்திவாரத்தை எடுக்கிறேன். நான் உங்களுக்காக உயிர் துறக்க போகிறேன். அதற்கு முன்பாக உங்களையெல்லாம் மன்னிக்க ஆசைப்படுகிறேன். மன்னிப்பு இல்லாத உறவு அர்த்தமற்றது என்று போதித்தவன் நான். **உன் சகோதர சகோதரிகளோடு மனத்தாங்கல் இருந்தாலே ஒப்புரவு செய்துகொள்** பின்னர் வந்து காணிக்கை செலுத்து என்று போதித்தவன் நான். இதோ இப்போது உங்களை நான் மனதார மன்னிக்கிறேன். தந்தையே, இவர்களை மன்னியும் என்று கடவுளிடம் இருந்து உங்களுக்கு மன்னிப்பு பெற்று தருகிறேன்.

இனி நமக்குள் எந்த மனத்தாங்களும் இல்லை எந்த காயங்களும் இல்லை நீங்கள் என்னை தீர்ப்பு விடவில்லை நீங்கள் என்னை சாட்டையால் அடிக்கவுமில்லை. ஏனெனில் நான் எல்லாவற்றையும் மன்னித்து விட்டேன். உங்களை நான் எவ்வாறு அன்பு செய்ய வேண்டும் என்று இந்த மண்ணுலகிற்கு வந்தேனோ அதே அன்போடு, இதோ, என் தந்தையின் கைகளில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்.

***செபம்***: இயேசு என்கின்ற மன்னிப்பே! "ஏழு முறை அன்று ஏழு எழுபது முறை" என்று சொன்னீரே, எனக்கு எதிராக சிறு தவறு செய்தவர்களை கூட மன்னிக்க மனமில்லாமல் பழி வெறிபிடித்து வாழ்ந்திருக்கிறேன். அது எவ்வளவு போலியான கிறிஸ்தவ வாழ்வு என்பதை உம்மைப் பார்த்து உணர்ந்து கொண்டேன். மன்னிப்பில் தான் வாழ்க்கையின் அர்த்தம் அடங்கியிருக்கிறது என்பதை உணர்கிறேன். என் உறவுகளை மனதார மன்னித்து வாழ வரம் தாரும். ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.**
**மரித்த விசுவாசிகளுடைய ஆத்மாக்கள் சர்வேசனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானம் இளைப்பாறக்கடவது.**

## பதிமூன்றாம் நிலை.

**உறவின் மடியில் என் உறவு தலை சாய்கிறது.**

**திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி அறிந்த ஸ்தோத்திரம் செய்கின்றோம்.**

**அது ஏனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரச்சித்தீர்.**

### உறவில் பிரிவு.

இறந்த என் உடலை இறக்கி என் தாய் மரியாவின் மடியில் வைக்கிறார்கள். தனக்கென இருந்த ஒரே மகனையும் நம் பாவங்களுக்காக பறிகொடுத்த ஒரு தாயின் துர்ப்பாக்கியமான நிலை. என் மகன் செய்த பாவம் என்ன? உங்களை அன்பு செய்ததற்கு நீங்கள் கொடுத்த அவல பரிசு இது தானோ? என்று அங்கலாய்த்து அழுகிறாள் என் அன்னை.

வாழ்நாள் முழுவதும் என்னை தன் நெஞ்சில் சுமந்தவர், பத்து மாதம் தன் வயிற்றில் சுமந்தவர், இப்போது என் உடலை சிறிது நேரம் தன் மடியில் சுமக்கின்றார். எத்தனையோ அற்புதமான நினைவுகள் அவர் உள்ளத்திலே அலை பாயலாம். எங்கெங்கோ அலைந்து தேடியும் கிடைக்காமல், கடைசியில் ஒரு மாட்டுத் தொழுவத்தில் என்னை ஈன்றெடுத்தாரே - அந்த அற்புத நினைவு.

ஏரோது கொல்ல தேடியபோது என் தந்தை சூசையோடு என்னை எகிப்திற்கு தூக்கி கொண்டு ஓடினாரே - அந்த அற்புத நினைவு.

என் சிறு வயதில் நான் எருசலேமில் காணாமல் போன பொழுது என்னை கண்டுபிடிக்க உறக்கம் இல்லாமல், உணவில்லாமல் தேடினாரே - அந்த அற்புத நினைவு.

கானா ஊரிலே அவருடைய சொல்கேட்டு தண்ணீரைத் திராட்சை இரசமாக மாற்றி முதல் புதுமை செய்தேனே - அந்த அற்புத நினைவு.

இப்படியாக அற்புதமான நிகழ்வுகள் பல அவர் மனதிலே வந்துபோக, இப்போது என் உடலை மடியிலே தாங்கி துக்கம் தாளாமல் அழுகிறார் என் அன்னை. அவருடைய ஒரே மகனாகிய என்னுடைய பிரிவு அவருக்கு அதிகமான துயரத்தை கொடுக்கிறது. அவருக்குப் புரிந்திருக்கும் உறவில் பிரிவு என்பது தவிர்க்க முடியாதது என்று. ஆனாலும் இந்த சிறுவயதில் பிரிவு என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. என் பிரிவை தாங்கிக் கொள்ள கடவுள் அவருக்கு சக்தி தரும்படி ஜெபிக்கிறேன். என் அன்பு சீடர் யோவானும், திருச்சபையும், துயரத்தில் வாடும் என் தாய்க்கு ஆறுதலாய் இருப்பார்கள் என்று நம்புகிறேன்.

***செபம்***: இயேசு என்கின்ற தேற்றுதலே! லாசர் இறந்து போனபோது மார்த்தாவையும், மரியாவையும் பார்த்து மனமுருகி அழுதீரே, கணவனை இழந்து, மனைவியை இழந்து, பிள்ளைகளை இழந்து, நண்பர்களை இழந்து, வாடும் என் சகோதர சகோதரிகளுக்கு ஆறுதல் தரவும், அவர்கள் நம்பிக்கை இழந்த தருணங்களில் நான் அவர்களோடு உடனிருக்கவும், என் உடனிறுப்பு அவர்களுக்கு மனவலிமையும், ஆறுதலும், தரும் வரம் தாரும். ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.**

**மரித்த விசுவாசிகளுடைய ஆத்மாக்கள் சர்வேசனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானம் இளைப்பாறக்கடவது.**

## பதினான்காம் நிலை.

### உறவு ஒன்று அடங்க மறுக்கிறது.

**திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி அறிந்த ஸ்தோத்திரம் செய்கின்றோம்.**

**அது ஏனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரச்சித்தீர்.**

**உறவில் அன்பை சொல்லுதல்.**

இறந்த என் உடலை ஒரு இரவல் கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள். எங்கே, இவன் சொன்னது போல் நடந்து விடுமோ என்று யூதர்களுக்கும், தலைமை குருக்களுக்கும், பரிசேயர்களுக்கும் அச்சம். பெரிய கல்லால் என் கல்லறையை அடைத்து, ஆயுதங்களோடு வீரர்களை பாதுகாப்பிற்கு வைக்கிறார்கள். அவர்கள் கல்லறையில் வைத்தது என் உடலைத் தானே, என் உறவுகளாகிய உங்களை அல்லவே. இறந்து போனது என் உடல் மட்டும் தானே, உங்களுக்காக என்றும் துடித்துக்கொண்டிருந்த என் இதயம் அல்லவே.

என் இதய அன்பை எப்படி அடைத்து வைக்க முடியும்? என் உறவு காட்டாற்று வெள்ளம் போன்றது. அதனை எவராலும் அணை போட்டு தடுக்க முடியாது. நான் வாழ்ந்த நாட்களில் எல்லாம் உங்கள் மீது நான் கொண்ட பிரியத்தை வெளிப்படையாகவே சொல்லி வந்தேன். அதை ஒருபோதும் நான் மூடி மறைக்கவில்லை. என் நேசத்தை சொல்ல நான் வெட்கப்படவும் இல்லை.

"சிறு குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள் அவர்களைத் தடுக்க வேண்டாம்" என்று சொன்னேன். லாசர் என் நண்பன் என்றும் சொன்னேன். என் நண்பன் லாசர் இறந்தபோது எல்லார் முன்னிலையிலும் கண்ணீர் விட்டு அழுதேன். பெத்தானியா சென்ற போதெல்லாம் மார்த்தா மரியா வீட்டில் தங்கினேன். பாவிகளோடும், வரி தண்டுபவரோடும், மக்களால் வெறுக்கப்பட்டவர்களோடும் நான் உரையாடினேன் உறவாடினேன். ஊதாரி மைந்தன் எல்லாவற்றையும் ஊதாரித்தனமாக செலவழித்து திரும்பி வந்தபோதும் ஓடோடிச் சென்று அவனைப் பேச விடாமல் கட்டியணைத்தேன். என்னை அன்பு செய்த, நான் நேசித்த என் அன்பு சீடன் யோவானை என் நெஞ்சில் தன் தலைசாய்க்க இடம் கொடுத்தேன். என்னை மறுதலித்த பின்பும் பேதுருவிடம் என்னை அன்பு செய்கிறாயா? என்னை அன்பு செய்கிறாயா? என்று மூன்று முறை கேட்டேன். உன் மீது நான் கொண்ட என் அன்பை வெளிக்காட்ட, உன் அன்பை நான் பெற்று மகிழ என்றுமே வெட்கப்படுவதில்லை.

இந்த சின்னஞ் சிறிய வயதில் இறப்பதால் எனக்கு வருத்தம் ஒன்றும் இல்லை. உங்கள் மீது நான் கொண்ட அன்பை உங்களுக்கு எடுத்துக் கூறி விட்டு தானே, என் உயிரை விடுகிறேன். உங்கள் மீது கொண்ட அன்பை என்னாலேயே கட்டுப்படுத்த முடியவில்லை, கேவலம் இந்த ஒரு கல்லும் இரண்டு காவலர்களுமா கட்டுப்படுத்தப் போகிறார்கள்?

***செபம்***: இயேசு என்கின்ற அன்பே! "நான் உங்களை அன்பு செய்தது போல நீங்களும் ஒருவரை ஒருவர் அன்பு செய்யுங்கள்" என்று சொன்னீரே, என்னுள் நிறைய அன்பு ஊறிக்கிடந்தும், அதை வெளிக்காட்டாமல், இறுகிய முகத்தோடு, போலித்தனமான நடை, உடை, பாவனையோடும் உயிருள்ள சடலமாக வாழ்ந்திருக்கிறேன். என்னை மன்னியும். உம்மைப் போல, என் அன்பை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தி, பரிவை மற்றவர்கள் மீது பொழிந்து ஓர் உறவு கூட்டமாக வாழ வரம் தாரும். ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.**

***மரித்த விசுவாசிகளுடைய ஆத்மாக்கள் சர்வேசனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானம் இளைப்பாறக்கடவது.***